## தேர்தல் நேரத்தைப் பயன்படுத்தி, தொகுதி மறுவரையறை மசோதாவைக் கொண்டு வர முயற்சி:

# பா.ஜ.க.வின் சூழ்ச்சி என்றைக்குமே நம்மிடம் எடுபடாது - உரிமைகள் பறிபோவதை தமிழ்நாடு வேடிக்கை பார்க்காது!

## மதுரை கிழக்குத் தொகுதி வேட்பாளர் அமைச்சர் மூர்த்தியை ஆதரித்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!



மதுரை, ஏப். 17–

**மதுரையில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், மதுரை கிழக்கு தொகுதி வேட்பாளர் அமைச்சர் மூர்த்தியை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.**

கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

அன்பான வரவேற்பு கொடுத்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் முதலில் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை கிழக்குத் தொகுதியில் நம் வெற்றி வேட்பாளர் அண்ணன் மூர்த்தி அவர்களுக்கு நீங்களெல்லாம் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில், அதாவது 50,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து கடந்த முறை சட்டமன்றத்துக்கு அனுப்பிவைத்தீர்கள். நம் தலைவர் அவரை அமைச்சராக்கி, அழகு பார்த்தார்கள். இந்த முறை, குறைந்தது ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் அண்ணன் மூர்த்தி அவர்களை வெற்றி பெறச் செய்து அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### மதுரைக்கு வந்தால், தனி ஆற்றல்

நேற்று விருதுநகர் மாவட்டத்தில் பிரச்சாரத்தை முடித்துவிட்டு நேற்றிரவுதான் மதுரைக்குள் நுழைந்தேன். எப்பொழுது மதுரைக்குள் வந்தாலுமே அது ஒரு தனிச் சிறப்பு, தனி ஆற்றல் வந்து விடும். அந்த அளவுக்குப் பாசக்கார மக்கள்தான் இந்த மதுரை மக்கள். உங்களிடம் பாசமும் அதிகமாக இருக்கும், அதே நேரத்தில் கோபமும் அதிகமாக இருக்கும். ஆனால், பாசமாக இருந்தாலும் கோபமாக இருந்தாலும் அதில் ஒரு நியாயம் இருக்கும். அதனால், வருகின்ற தேர்தலில் உங்களின் பாசத்தை நம் தி.மு.க கூட்டணி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, நம் வெற்றி வேட்பாளர் அண்ணன் மூர்த்தி அவர்கள் மேல் வைத்து உதயசூரியன் சின்னத்தில் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

இந்த மதுரை மண்தான் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மண். இன்று பாசிச பா.ஜ.கவால் தமிழ் மொழிக்கு ஆபத்து வந்திருக்கிறது, நம் தமிழ்நாட்டுக்கு ஆபத்து வந்திருக்கிறது, தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு ஆபத்து வந்திருக்கிறது. நம் உயிருக்கு நிகரான தமிழ் மொழியையும் தமிழ் நாட்டையும் பாதுகாப்பது எவ்வளவு முக்கியம் என்று மதுரை மக்களுக்கு நான் சொல்லித் தர வேண்டிய அவசியம் இல்லை. தமிழ்நாட்டைப் பாதுகாப்பதற்கான தேர்தல்தான் வரப்போகின்ற இந்தச் சட்டமன்றத் தேர்தல். மதுரை மக்கள் நீங்கள் எப்போதுமே விழிப்புணர்வோடு இருப்பீர்கள். அதனால்தான் மதுரையை எப்பொழுதுமே தூங்கா நகரம் என்று சொல்வார்கள். அரசியல் விழிப்புணர்ச்சியிலும் இந்த மதுரைதான் என்றைக்குமே தூங்கா நகரம்.

சங்கிகள் என்னதான் கலவரம் செய்ய, என்னதான் திட்டம் போட்டு வந்தாலும், நீங்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து அவற்றையெல்லாம் ஒவ்வொரு முறையும் நீங்கள் முறியடித்துக் காட்டுகிறீர்கள். அதற்கு இந்த மதுரையே சாட்சி. சென்ற சட்டமன்றத் தேர்தலின் போது இதே மதுரையில் இருந்துதான் `எய்ம்ஸ்' செங்கலை எடுத்துக்கொண்டு சென்று தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் செய்தேன். எப்படி ஒன்றிய பா.ஜ.க அரசு தமிழ்நாட்டுக்கு எந்தத் திட்டத்தையும் கொடுப்பது இல்லை. எய்ம்ஸ் மருத்துவமனை அடிக்கல் நாட்டி, 11 வருடம் ஆகிறது என்பது உங்களுக்குத் தெரியும். இப்போது வரை திறப்பதற்கான வழி கிடையாது. பார்த்துப் பார்த்துச் செதுக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

இதே மாதிரிதான் தமிழ்நாட்டுக்கு எந்தத் திட்டத்தையும் ஒன்றிய அரசு கொடுப்பது இல்லை.

### நம்பிக்கைக்குரிய வெற்றி வீரர்

அண்ணன் மூர்த்தி அவர்களைப் பற்றி உங்களிடம் நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை. உங்களுக்கான அறிமுகம் தேவையில்லை. உங்கள் அனைவருக்கும் நன்கு அறிமுகமானவர்தான் அண்ணன் மூர்த்தி அவர்கள். நம் கழகத் தலைவரின் நம்பிக்கைக்குரிய ஒரு வெற்றி வீரர், செயல் வீரர். எனக்கு என்ன பெருமை என்றால், நான் இளைஞர் அணியின் செயலாளர், அண்ணன் மூர்த்தி அவர்களும் இளைஞர் அணியிலிருந்து, உழைத்து படிப்படியாக கழகப் பணியாற்றி முன்னுக்கு வந்தவர். இளைஞர் அணியில் பணியாற்றி ஒன்றியச் செயலாளர், மாவட்டச் செயலாளர், இப்போது சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர் என்று ஒவ்வொரு படியிலும் தன் உழைப்பின் மூலம் நிரூபித்து, தலைவரின் அன்பைப் பெற்றவர், பாசத்தைப் பெற்றவர், குறிப்பாக, இந்தப் பகுதி மக்களான உங்களின் நம்பிக்கையைப் பெற்றவர்.

அண்ணன் மூர்த்தி அவர்களை உதயசூரியன் சின்னத்தில் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வையுங்கள் என்று, அன்று கேட்டோம். இன்று மீண்டும் உங்களிடம் உரிமையாக வந்து கேட்கிறோம், உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களியுங்கள். அண்ணன் மூர்த்தி அண்ணனை வெற்றி பெற வையுங்கள் என்று. எந்த உரிமையில் கேட்கிறோம்? பல சாதனைகளை, பல திட்டங்களை இந்தத் தொகுதிக்கு அண்ணன் மூர்த்தி அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார். ஒரு சில திட்டங்களை மட்டும் இங்கே நான் எடுத்துக்காட்டாகக் கூற விரும்புகிறேன்.

### மதுரை திட்டங்கள்

சத்திரப்பட்டி, காவனூர், குலமங்கலம் மற்றும் வீரபாண்டி உள்ளிட்ட 900 ஊராட்சிகளுக்கு 1,600 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் பிரம்மாண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் அண்ணன் மூர்த்தி அவர்களுடைய முயற்சியால் வந்தது.

50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வண்டியூர் ஏரியை அழகுப்படுத்துகின்ற பணி நடைபெறுகிறது என்றால், அதற்குக் காரணம் உங்களின் அமைச்சர் அண்ணன் மூர்த்தி அவர்கள்.

மதுரை கொச்சி சாலையில் போக்குவரத்து வசதிக்காக 53 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுப் புதிய மேம்பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அதுவும் அண்ணன் மூர்த்தி அண்ணனின் முயற்சி.

சக்கிமங்கலத்தில் 98 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒரு அடுக்குமாடி தொழில் பேட்டை (Multi Storey Industrial Estate) அமைக்கும் பணி வந்திருக்கிறது என்றால், உங்களின் அமைச்சர் அண்ணன் மூர்த்தி அவர்கள், அவருடைய உழைப்பு.

117 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திண்டுக்கல் சாலை முதல், தெப்பக்குளம் வரை வைகை தென் கரைச் சாலை இன்று போடப்பட்டிருக்கிறது.

84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரை கிழக்கு ஒன்றியத்தில் 158 கிலோ மீட்டர் நீளத்துக்கு கிராமச் சாலைகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன.

மாலைப்பட்டி ஊராட்சியில் புதிய நியாய விலைக் கடை, நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் குடிநீர்க் குழாய் இணைப்புகள் கொடுத்திருக்கிறார்.

கிழக்கு ஒன்றியப் பகுதியில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மருத்துவக் கட்டமைப்புப் பணி நடந்திருக்கிறது.

சத்திரப்பட்டி ஊராட்சியில், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 161 குடிநீர்க் குழாய் இணைப்புகள் கொடுத்திருக்கிறோம்.

திருமோகூர் ஊராட்சியில் புதிய கிராம மகளிர் குழுத் தொழிற்கூடம், வரிச்சியூர் ஊராட்சியில் புதிய உணவு தானியச் சேமிப்புக் கிடங்கு, சக்குடி மற்றும் கருப்பாயூரணி ஊராட்சியில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கொடுத்திருக்கிறோம்.

இவ்வளவு திட்டங்களையும் செய்து கொடுத்துவிட்டுத்தான் இன்று மீண்டும் அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள், இந்த மதுரை கிழக்கில் அண்ணன் மூர்த்தி அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, மிகப் பெரிய வெற்றியைத் தேடித் தர வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்பதற்கு நான் வந்திருக்கிறேன்.

### கருப்புச்சட்டை அணிந்தது ஏன்?

நம் தலைவர் அவர்கள் தொடர்ந்து சொல்வது மாதிரி, இந்தச் சட்டமன்றத் தேர்தல் டெல்லி அணியா, தமிழ்நாடு அணியா? தமிழ்நாடு அணி நாம் வென்று காட்ட வேண்டும், டெல்லி அணியை வீழ்த்தியாக வேண்டும்.

இன்று ஒரு முக்கியமான நாள். உங்களுக்குத் தெரியும், இன்று காலையில் நம் தலைவர் அவர்கள் நாமக்கல்லில் பெரிய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார். ஒன்றிய பா.ஜ.க. அரசு இன்று நாடாளுமன்றத்தைக் கூட்டி, `தொகுதி மறுவரையறை மசோதா'வை இன்று நிறைவேற்றப் பார்க்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு, பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையில் இந்தத் தொகுதி மறுவரையறை மசோதாவை, நாம் எதிர்ப்பு தெரிவிப்பதால்தான் இன்று நான் கருப்புச்சட்டை அணிந்துகொண்டு வந்திருக்கிறேன்.

### தமிழ்நாட்டுக்கு 59 வர வேண்டும்

நம் தலைவரின் வேண்டுகோள்படி இன்று தமிழ்நாடு முழுவதும் வீடுகளில், கடைகளில், தெருக்களில் எல்லாம் நாம் கருப்புக் கொடிகளைப் பறக்க விட்டுள்ளோம். தொகுதி மறுவரையறை மசோதாவை ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களாகிய நாம் அனைவரும் சேர்ந்து அதை எதிர்க்க வேண்டும். ஏனென்றால், மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு மாநிலத்தின் எம்.பி.க்கள் எண்ணிக்கையை நிர்ணயிக்கப் போகிறார்கள். அப்படிச் செய்யும்போது நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்க முயற்சி செய்கிறார்கள். இப்போது தமிழ்நாட்டுக்கு 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதை அவர்கள் சரியாகப் பிரித்துக் கொடுத்தார்கள் என்றால், 59 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டுக்கு வர வேண்டும். ஆனால், இன்று ஒன்றிய அரசு, என்ன திட்டம் போடுகிறார்கள் தெரியுமா? தமிழ்நாட்டுக்கு வெறும் 47 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் ஒதுக்கீடு செய்ய முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டுக்கு 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறையப்போகிறார்கள். ஏன் குறைகிறார்கள்? அன்று, ஒன்றிய அரசு குடும்பக் கட்டுப்பாடு செய்து, மக்கள் தொகையைக் குறைக்க வேண்டும் என்று ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் சொன்னார்கள். மற்ற மாநிலங்கள், வட மாநிலங்கள் எல்லாம் அதைச் சரியாகச் பின்பற்றவில்லை. ஆனால், நம் தமிழ்நாடு, தமிழ்நாட்டு மக்கள் மட்டும் அதைச் சரியாகச் செய்து இன்று மக்கள் தொகையை நாம் கட்டுப்படுத்தி இருக்கிறோம். நாம் ஒன்றிய அரசு ஒரு விஷயத்தைச் சொன்னதனால், அதைச் சரியாகச் செய்ததனால் இன்று நம் உரிமைகளை ஒன்றிய அரசு பறிக்கப்பார்க்கிறது.

### எதிர்ப்புத் தெரிவித்தோம்

இதைத்தான் சென்ற வருடமே நம் முதலமைச்சர் அவர்கள் சென்னையில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்டி எல்லா முதலமைச்சர்கள், எல்லா தலைவர்களையும் வைத்து நாம் எதிர்ப்பு தெரிவித்தோம். ஆனாலும், ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்த மசோதாவை இன்று அவசர அவசரமாகக் கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு குடும்பமும் இந்த மசோதாவை நாம் எதிர்க்க வேண்டும் என்று தலைவர் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் தேர்தல் பிரச்சாரத்தில் நாம் இருப்பதால், நம்மையெல்லாம் திசைதிருப்பி, இந்த நேரத்தைப் பயன்படுத்தித் தொகுதி மறுவரையறை மசோதாவைக் கொண்டு வருவதற்கு ஒன்றிய பா.ஜ.க அரசு இன்று முயற்சி செய்கிறது. பா.ஜ.கவின் சூழ்ச்சி தமிழ்நாட்டில் என்றைக்குமே எடுபடாது. அதை இந்த வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலும் அதை நிரூபித்துக் காட்டுவோம்.

தமிழ்நாட்டின் உரிமைகள் பறிபோவதை இனி மேல் நம்மால் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. தமிழ்நாட்டின் உரிமையைப் பறிக்கின்ற இந்தத் தொகுதி மறுவரையறைக்கு எதிராகத் தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பமும் வீதிக்கு வந்து நாம் போராட வேண்டும். இன்று தமிழ்நாடு முழுவதும் சட்ட நகலை எரிக்கிறோம். நம் தலைவர் அவர்கள் நாமக்கல்லில் எரித்தார்கள். நாம் அனைவரும் சேர்ந்து அந்தச் சட்ட நகலை இன்று இங்கே எரிக்கப் போகிறோம்.

### உதயசூரியன் சின்னம்

இப்படிப்பட்ட பாசிஸ்டுகளுக்கும் அடிமைகளுக்கும் சரியான பாடத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டிய தேதி ஏப்ரல் 23 சட்டமன்றத் தேர்தல் நடைபெறப் போகிறது. மே 4ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை. வாக்கு எண்ணிக்கையின் பொழுது மீண்டும் நம் தலைவர்தான் முதலமைச்சராக வரப்போவது உறுதி. அதற்கு மேலும் வலுசேர்க்கும் விதமாக இந்த மதுரை கிழக்குத் தொகுதியில் அண்ணன் மூர்த்தி அவர்களுக்கு, அதிகமான வாக்கு வித்தியாசத்தில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்துப் மிகப் பெரிய வெற்றியைத் தேடித் தர வேண்டும்.

நம் தலைவர் பல வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார், அந்த வாக்குறுதிகளையும் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

நம் தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். மீண்டும் ஆட்சி அமைத்தோம் என்றால், மகளிர் உரிமைத்தொகை 1,000லிருந்து 2,000ஆக உயர்த்தித் தருவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

### காலை உணவுத் திட்டம்

காலை உணவுத் திட்டம்: அரசுப் பள்ளியில் படிக்கக்கூடிய குழந்தைகள் காலையில் பள்ளிக்கூடத்துக்கு வந்தார்கள் என்றால், பசியோடு படிக்க கூடாது என்று முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். ஐந்தாம் வகுப்பு வரை கொடுத்துக் கொண்டிருக்கிறோம், இப்போது அதை எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப் போகிறோம் என்று சொல்லி இருக்கிறோம்.

பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சேர்ந்து படித்தாலும் அவர்களுக்குக் கல்வி உதவித் தொகை 1,000 ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறோம். 14 லட்சம் மாணவ, மாணவிகள் ஆண்டு தோறும் பயன்பெறுகிறார்கள். அந்தக் கல்வி உதவித்தொகையை இப்போது 1,500ஆக உயர்த்துவேன் என்று நம் முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

முதியோர் உதவித்தொகை மாதம் 1,200 ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறது நம் அரசு. அதை உயர்த்தி 2,000 ரூபாய் கொடுப்போம் என்று நம் தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

### 35 இலட்சம் மடிக்கணினிகள்

அடுத்த ஐந்து ஆண்டுகளில் 50 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தை உருவாக்குவோம் என்று சொல்லியிருக்கிறோம். அடுத்த ஐந்து வருடத்தில் 35 இலட்சம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 இலட்சம் கலைஞர் கனவு இல்லம் கட்டப்பட்டு யாருக்கெல்லாம் வீடு இல்லையோ அவர்கள் அனைவருக்கும் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு வழங்குவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

### மின்சாதனப் பொருட்கள்

இவை எல்லாவற்றையும்விட முக்கியமான வாக்குறுதி உங்களுக்குத் தெரியும். ஆட்சி அமைத்த உடனே நம் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மகளிர் கைகளிலும் 8,000 ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்துவிடுவார்கள். அந்த 8,000 ரூபாயைப் பயன்படுத்தி நீங்கள் உங்கள் வீட்டிற்குத் தேவையான மின்சாதனப் பொருட்கள் எதுவாக இருந்தாலும் அதை நீங்களே முடிவு செய்து வாங்கிக்கொள்ளலாம் என்று நம் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்றால், வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் இந்த மதுரை கிழக்கில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் அண்ணன் மூர்த்தி அவர்களை நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகப் பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன், உதயசூரியன் சின்னத்தில் அண்ணன் மூர்த்தி அவர்களுக்கு வாக்களித்து, அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வையுங்கள். அவரை மீண்டும் நம் தலைவர் அவர்கள் அமைச்சராக்கி, இந்தத் தொகுதிக்கு என்னென்ன தேவையோ அத்தனை திட்டங்களையும் அவர் செய்து கொடுப்பார் என்ற வாக்குறுதியைக் கொடுத்து, இந்த அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் எம்.ஆர்.எம்.பாலசுப்ரமணியம், சோமசுந்தரபாண்டியன், ஆசைக்கண்ணன், ரோகிணி பொம்மதேவன், வெங்கடேசன், வடிவேல் முருகன், கே.பி.பூமிநாதன், ஜெயக்குமார், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, ஒன்றிய பகுதி கழகச் செயலாளர்கள் சிறைச்செல்வன், ஏ.பி.ரகுபதி, மதிவாணன், முகமது காதர், ஹக்கீம், சசிகுமார், கௌரி சங்கர், பாண்டியராஜன், மருதுபாண்டியன், துரைபாண்டியன், சார்பு அணிகளைச் சேர்ந்த மாநில நிர்வாகிகள் நேரு பாண்டியன், கலை கார்த்திகேயன், கலாநிதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இளங்கோ, துணை அமைப்பாளர்கள் மருது ராஜா, முத்துப்பாண்டி, குமரேசன், வெற்றிச்செல்வன், ஐயப்பன், அன்புச்செல்வன், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



சென்னை ஆலந்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் தா.மோ.அன்பரசனுக்கு ஆலந்தூர் வடக்கு பகுதி தகவல் தொழில்நுட்பஅணி பகுதி ஒருங்கிணைப்பாளர் (SM) த.தரணிவேந்தன் தலைமையில்ஆதம்பாக்கம் ஆபீஸர்ஸ் காலனி பகுதியில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளர் வி.செந்தில்பாலாஜி காட்டூர் பகுதி, அகஸ்டின் பேட்டை, காந்தி நகர் உள்ளிட்ட பகுதிகளில் வீடு, வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் மாநகர் மாவட்ட கழக துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், பகுதி கழக பொறுப்பாளர் விஜயகுமார் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.